அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
Ang Mo Kio Tamil Methodist Church

15th நவம்பர் / November 2026 ஞா யிறு ஆராதனை / Sunday Service

ஆராதனைக்கு அழைப்பு Call to Worship	**திரு. திமோதி ஆனந்த்** Mr. Timothy Aananth
இறைவணக்கப்பாடல் Introit	**பாடகர் குழு** Choir
ஜெபம் Prayer	**திரு. திமோதி ஆனந்த்** Mr. Timothy Aananth
தொடக்க பாடல் Opening Song	**சபையார் இணைந்து** Congregation

என்தன் ஆத்ம நேசரே

1. என்தன் ஆத்ம நேசரே,
வெள்ளம்போன்ற துன்பத்தில்,
தாசன் திக்கில்லாமலே
தடுமாறிப்போகையில்,
தஞ்சம் தந்து, இயேசுவே,
திவ்விய மார்பில் காருமேன்
அப்பால் கரையேற்றியே
மோட்ச வீட்டில் சேருமேன்.

2 வல்ல தேவரீர் அல்லால்
வேறே தஞ்சம் அறியேன்;
கைவிடாமல் நேசத்தால்
ஆற்றித் தேற்றித் தாங்குமேன்;
நீரே என்தன் நம்பிக்கை,
நீர் சகாயம் செய்குவீர்;
ஏதுமற்ற ஏழையை
செட்டையாலே மூடுவீர்.

3. குறை யாவும் நீக்கிட,
நாதா, நீர் சம்பூரணர்;
திக்கற்றோரைத் தாங்கிட
நீரே மா தயாபரர்;
நான் அசுத்த பாவிதான்,
நீரோ தூயர் தூயரே;
நான் அநீதி கேடுள்ளான்,
நீர் நிறைந்த நித்தியரே.

4. பாவம் யாவும் மன்னிக்க
ஆரருள் அமைந்த நீர்
என்னை சுத்திகரிக்க
அருள் பாயச்செய்குவீர்;
ஜீவ ஊற்றாம் இயேசுவே,
என்தன் தாகம் தீருமேன்;
ஸ்வாமி, என்றும் என்னிலே
நீர் சுரந்து ஊறுமேன்.

மாறி வாசித்தல் 46ம் ஞாயிறு ***"சங்கீதம் 138"***	**சபையார் இணைந்து** Congregation

"கர்த்தரின் மகிமை"

Psalter Reading "Psalm 138"

தந்தை போற்றி Gloria Patri	**சபையார் இணைந்து** Congregation
துதி ஆராதனை Singspiration	
ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம் Thanksgiving & Pastoral Prayer	
பரமண்டல ஜெபம் Lord's Prayer	**சபையார் இணைந்து** Congregation
காணிக்கை பாடல் Offertory Song	**சபையார் இணைந்து** Congregation

யேசுவே, கிரு பாசனப்பதியே

யேசுவே, கிரு பாசனப்பதியே, கெட்ட
இழிஞன் எனை மீட்டருள்,
ஏசுவே, கிரு பாசனப்பதியே.

1. காசினியில் உ னை அன்றி, தாசன் எனக் காதரவு
கண்டிலேன், சருவ வல்ல மண்டலாதிபா!
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து,
நித்தனே, எனைத் திருத்தி, வைத்தருள் புத்தி வருத்தி, - ஏசு

2. பேயுடைச் சிறையதிலும், காய வினைக் கேடதிலும்,
பின்னமாகச் சிக்குண்ட துர்க் கன்மி ஆயினேன்;
தீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற்றுதிரம் விட்ட
தேவனே, எனைக்கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி,- ஏசு

3. சிறைப்படுத்தினவற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீரமுள்ள எங்கள் உப கார வள்ளலே,
குறை ஏதுனை அண்டினோர்க் கிறைவா? எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து, முற்றுமுடியக் கண் பார்த்து, - ஏசு

4. பொல்லா உலகம் இதில் நல்லார் எவரும் இல்லை,
புண்ணியனே உன் சரணம் நண்ணி அண்டினேன்;
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி?
இந்நாள் அருள் புரிந்து உன் ஆவியைச் சொரிந்து, -ஏசு

பூலோகத்தாரே யாவரும் Doxology	**சபையார் இணைந்து** Congregation
திருமறைப் பாடம் Scripture Reading	**திரு. எட்வின் மதுரம்** Mr. Edwin Mathuram

லூக்கா 16 : 19 - 31
Luke 16 : 19 - 31

அருளுரை — ***மறைதிரு. ஆர்.பிரபு***
Sermon — Rev. R. Prabhu

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

<u>பாவத்தின் பலன் நரகம்</u>

1. பாவத்தின் பலன் நரகம் ஓ பாவி நடுங்கிடாயோ கண்
காண்பதெல்லாம் அழியும் காணாததல்லோ நித்தியம்

ஏசுராஜா வருவார்
இன்னும் கொஞ்சங் காலம்தான்
மோட்சலோகம் சேர்ந்திடுவோம்

2. உலக இன்பம் நம்பாதே அதின் இச்சை யாவும் ஒழியும்
உன் ஜீவன் போகும் நாளிலே ஒரு காசும் கூட வாராதே

3. உன் காலமெல்லாம் போகுதே உலக மாயைகளிலே
ஓ! தேவ கோபம் வருமுன் உன் மீட்பரண்டை வாராயோ

4. தேவன்பின் வெள்ளம் ஓடுதே கல்வாரி மலைதன்னிலே
உன் பாவம் யாவும் நீங்கிப்போம் அதில் ஸ்நானம் செய்வதாலே

5. மா பாவியான என்னையும் நேசர் ஏற்றுக் கொண்டாரே
ஓ! பாவி நீயும் ஓடிவா தேவாசீர்வாதம் பெறுவாய்

அறிவிப்புகள்
Announcements

✝ ***<u>மனப்பாட வசனம்</u>*** — ***சபையார் இணைந்து***
<u>Memory Verse</u> — Congregation

வெளிப்படுத்தல் 21 : 3
Revelations 21 : 3

3. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***
Closing Prayer & Benediction

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும் ⁄ Indicates Congregation standing***